**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 64/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. மனோகரன் |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | கோவிந்தாங்கல் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 51 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நானும், ஆறுமுகம் மகன் ஹரிகிருஷ்ணனும் கோவிந்தாங்கல் பேருந்து நிறுத்தத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது பானாவரம் காவல் ஆய்வாளர் ரங்கநாதன் மனைவி கங்கா கொடுத்த புகாரின் பேரில் நாங்கள் பேசிக் கொண்டிருந்த பேருந்து நிறுத்தத்திற்கு வந்து எங்களிடம் ரங்கநாதன் கொலை வழக்கு சம்பந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். பிறகு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். மேற்படி அந்த இடத்தில் சில தடயங்கள் கிடைத்ததாக என்னிடம் கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரலிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் முன்னிலையில் இரத்தம் தோய்ந்த கல், ஆலமர இலை மற்றும் செருப்பு ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள். அவைகள் முறையே **சாபொ.1 முதல் சாபொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

பேருந்து நிறுத்தத்தில் வழக்கு சொத்துக்களான இரத்த தோய்ந்த மண் மற்றும் இரத்தம் தோயாத மண் மற்றும் செருப்பு ஆகியவையுடன் இந்த நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்பு பைப் போலீசார் கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு நானும் ஹரிகிருஷ்ணனும் பானாவரம் காவல் நிலையத்திற்கு சென்றோம். காவல் நிலையத்திலும் நான் கையொப்பம் இட்டேனா என்றால் ஆமாம். நானும் ஹரிகிருஷ்ணனும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையொப்பங்களை காவல் நிலையத்தில் தான் போட்டோம்.

**<u>மறுவிசாரணை:–</u>**

நான் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்த போது ஒரு கையொப்பம் போட்டேன். காவல் நிலையத்தில் ஒரு கையொப்பம் போட்டேன்.

**<u>மறு குறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்:–</u>**

வரைபடம் வரைந்த போது நான் ஒரு கையொப்பத்தையும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பார்வை மகஜரலிலுள்ள கையொப்பங்களை போலீசார் என்னை காவல் நிலையத்தில் விசாரிக்கும் போது இட்டேன் என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.17 17:28:57 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.